# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 194 of 2019

| | | |
|---|---|---|
| பெயர் | : | மனோகர் |
| தந்தை பெயர் | : | நாகமுத்து |
| வயது | : | 51 |
| தொழில் | : | watch man |
| முகவரி | : | பன்ருட்டி |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 21.06.2025 அன்று **Selvi. B. Phebe, B.A., L.L.B.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 1-ம் வாதி ஆவேன். என்னை வாதி தரப்பு சாட்சி -1 ஆக விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

கீழே கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய தாக்கல் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 02.07.2016 | கடலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.32/2011 உத்தரவு- நகல் | வா.**த.சா.ஆ.12** |
| 2. | 09.06.1952 | கோபால் பிள்ளை என்பவருக்கு சின்ன சாமி ஜோதி எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் ஆவண எண்.1205/1952ன் -நகல் | **வா.த.சா.ஆ.13** |
| 3. | 21.02.1959 | துரைக்கண்ணு படையாச்சி என்பவருக்கு கோபால் பிள்ளை எழுதிக்கொடுத்த மேடோவர் பத்திரம் ஆவண எண்.487/1959 ன் -நகல் | **வா.த.சா.ஆ.14** |
| 4. | - | கடலூர் டி.மு.கோ. O.S.403/1953ன் சூட் ரிஜிஸ்டர்- நகல் | **வா.த.சா.ஆ.15** |
| 5. | - | கடலூர் டி.மு.கோ. O.S.403/1953ன் EP.884/1958 மனுவின் -நகல் | **வா.த.சா.ஆ.16** |
| 6. | - | கடலூர் டி.மு.கோ. O.S.511/1961ன் சூட் ரிஜிஸ்டர் -நகல் | **வா.த.சா.ஆ.17** |
| 7. | - | கடலூர் டி.மு.கோ. O.S.511/1961ன் EP.468/1979 மனுவின் | **வா.த.சா.ஆ.18** |

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.06.23 14:57:09 +0530

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக- நகல் | |
| 8. | - | சென்னை உயர் நீதிமன்ற S.A.201/1989 ன் உத்தரவு -நகல் | **வா.த.சா.ஆ.19** |
| 9. | - | கடலூர் ADM Court OS.32/2011 IA.141/2011ன் உத்தரவு-நகல் | **வா.த.சா.ஆ.20.** |
| 10. | 29.07.1985 | கடலூர் PSJ Court OS.No.27/1983 டிக்கிரி காப்பி-நகல் | **வா.த.சா.ஆ.21** |
| 11. | 03.10.2007 | பண்ருட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வாதி தாக்கல் செய்த பத்திர பதிவு தடை மனு எண் 14/07 | **வா.த.சா.ஆ.22.** |
| 12. | 20.05.2009 | பண்ருட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் அண்ணாமலை படையாச்சி தாக்கல் செய்த பிரமான வாக்குமூலம் | **வா.த.சா.ஆ.23.** |
| 13. | 01.07.2019 | வாரிசு சான்றிதழ் (இறந்த நாகமுத்துவுக்கு) | **வா.த.சா.ஆ.24.** |
| 14. | - | குடும்ப அட்டை- நகல் (வாதியின் சகோதரர்) | **வா.த.சா.ஆ.25.** |
| 15. | 04.05.2017 | சாதிச் சான்றிதழ் -நகல் (வாதியின் சகோதரர்) | **வா.த.சா.ஆ.26.** |
| 16. | 23.11.2020 | வாரிசு சான்றிதழ் -நகல்(இறந்த வள்ளிக்கு) | **வா.த.சா.ஆ.27.** |
| 17. | 27.09.2000 | இறப்பு சான்றிதழ்-நகல் (வாதியின் தந்தை) | **வா.த.சா.ஆ.28.** |
| 18. | 24.02.2021 | இறப்பு சான்றிதழ் -நகல்(வாதியின் தாயார்) | **வா.த.சா.ஆ.29.** |
| 19. | - | வாதியின் ஆதார் -நகல் | **வா.த.சா.ஆ.30.** |
| 20. | - | வருவாய் கோட்டாட்சியர் அலுவலக விசாரணை அழைப்பாணைகள்-நகல் | **வா.த.சா.ஆ.31.** |
| 21. | 03.08.2007 | VAO சான்றிதழ்-நகல் | **வா.த.சா.ஆ.32.** |
| 22. | 28.07.1982 | நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தேதியிட்ட அ-பதிவேடு -நகல் | **வா.த.சா.ஆ.33** |

வா.த.சா.ஆ. 12 முதல் வா.த.சா.ஆ. 33 வரை குறியீடு செய்யப்படுகிறது. **(தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் மட்டும் ஆட்சேபனையுடன் குறியீடுசெய்யப்படுகிறது)**

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.06.23 14:57:20 +0530

**O.S.No.194/2019** தேதி:**21.06.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (மனேகர், த/பெ.நாகமுத்து) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 முதல் 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தானது சின்னசாமி ஜோகி என்பவரால் 25.01.1951 ல் கைிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான் சின்னசாமி ஜோகி என்பர் 07.10.1959 அன்று அண்ணாமலைக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அண்ணாமலை என்பவர் ஆர். கே. குமார் என்பவருக்கு 23.02.2009 அன்று கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். ஆர்.கே.குமார் அவரது மகள் மீனா என்பவருக்கு 06.03.2012 அன்று தான செட்டில்மன்டு எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். மீனா என்பவர் பெருமாள் என்பவருக்கு 02.07.2012 அன்று கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். பெருமாள் என்பவர் ஜெயசந்திரனும் மற்றும் சிலருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் சார்பதிவகத்தில் பதிவு சட்டவிதிகளுக்கு உட்ப்ட்டுதான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2009 லேயே நான் அங்கு குடியிருப்பதாக கூறி ஒரு தடை மனு தாக்கல் செய்திருந்தேன் . அப்படி இருந்தும் வழக்கு சொத்தானது காலி மனை என்று கிரையபத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வழக்கு சொத்து பொறுத்து ஏற்கனவே கடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 403/1953 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு அசல் வழக்கு எண் 511/1961 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அதன் பின்னிட்டு அசல் வழக்கு எண் 32/2011 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அதன் பின்னிட்டு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 27/1983 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரிதான். அதன் பின்னிட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் எஸ்.ஏ. எண் 201/1989 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரிதான். மேற்சொன்ன வழக்குகளில் எதிலும் வழக்கு சொத்தினை பதிவு செய்யக்கூடாது என்று நீதிமன்றம் எந்த தடை உத்தரவும் பிறபிக்க வில்லை என்றால் சரிதான். 03.10.2007 அன்று பன்ருட்டி சார் பதிவாளரிடம் தடை மனு நான் தான் தாக்கல் செய்தேன். அந்த மனுவில் நீதிமன்றத்தில் இருந்து தடை உத்தரவு பெற்றால் மட்டுமே பத்திரப்பதிவினை நிறுத்த முடியும் என்று எழுத்துபூர்வமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்ட ஆவணத்தை நீங்கள் தொலைத்துவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட கிரையங்கள் எல்லாம் பதிவு சட்ட விதிகளுக்கு உட்பட்டும் பதிவுதுறை அதிகாரியின் வழிகாட்டுகளின் பெயரில் கிரைய ஆவணங்கள் பதிவுக்கு உட்படுத்தப்பட்டதால் நஷ்டஈடு கொடுக்க நாங்கள் கடமைபட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தினை பொறுத்தி நீதிமன்ற தடைஉத்தரவு பெறப்பட்டிருந்தால் மேற்சொன்ன கிரையங்கள் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நீதிமன்ற தடைஉத்தரவு ஏதுவும் சார்பதிவாளரிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான் , ஆகவே இவ்வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றால் சரியல்ல. குறுக்கு விசா ரணை தொடர்ச்சி இல்லை.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.06.23 14:57:33 +0530